DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII - CODE OF ORIGINAL PROCEDURE)
IN THE COURT OF ASSISTANT SESSIONS , DHARAPURAM.
Sessions Case No.177/2023

**02.06.2025.**

**அ.சா.1, திரு.சிவக்குமார், த/பெ.ராஜேந்திரன், சாட்சி ஆஜர், அ.சா.1 சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் தரப்பில் முதல் விசாரணையின் தொடர்ச்சி:-**

நான் இவ்வழக்கில் ஏற்கனவே கடந்த 12.08.2024 ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி முதல் விசாரணை செய்யப்பட்டேன். அதன் தொடர்ச்சியாக இன்று அரசு தரப்பில் கூடுதல் முதல் விசாரணைக்காக சாட்சியம் அளிக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பணம் ரூ.7,000/-(மொத்தம் 14*500 ரூபாய் நோட்டுக்கள்) 1ம் எதிரி கதிரவனிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட ரூபாய் 7,000/- சா.பொ.2 ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 3 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். சம்பவம் நடந்த சமயத்தில் நான் டாஸ்மார்க்கில் விற்பனையாளராக வேலை செய்து வந்தேன். நான் டாஸ்மார்க்கில் 2003 ம் ஆண்டு வேலைக்கு சேர்ந்தேன். கடையில் பொருள்களை விற்பனை செய்வது தான் என்னுடைய வேலை என்றால் சரிதான். கடையில் பணம் வரவு செலவு மற்றும் வங்கியில் ஒப்படைப்பது அனைத்தும் கடையின் மேற்பார்வையாளர் வேலை என்றால் சரிதான். பணத்தை நான் எடுத்து செல்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை குறைவான வாகனங்கள் செல்லப்படும் சாலை ஆகும். அதிகமாக வாகனங்கள் செல்லாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவது இருட்டான நேரம் என்றால் சரிதான். அந்த சாலையில் மது அருந்தியவர்கள் பாட்டில்களை ஆங்காங்கே உடைத்துப்போடுவது வழக்கம் என்றால் சரிதான். ஒவ்வொரு நாளும் எவ்வளவு பணம் வசூலாகும் என்ற விவரத்தை ஒரு குறிப்பேட்டில் மேற்பார்வையாளர் குறித்து வைத்துக்கொள்வார் என்றால் சரிதான். அன்றைய தினமும் மேற்பார்வையாளர் குறிப்பேட்டில் குறித்து வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த குறிப்பேட்டை போலிசாரிடம் ஒப்படைத்தேன். தொகையின் விவரத்தை புகாரிலோ, போலிஸ் விசாரணையிலோ சொல்லியுள்ளேன் ஆனால் குறிப்பிட்டு ரூபாய் நோட்டுகளின் எண்ணிக்கையை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) சம்பவம் நடந்த சிறிது நேரத்திலேயே போலிசார் சம்பவ இடம் வந்தனர் என்றால் சரிதான். அப்போதே என்னிடம் போலிசார் விசாரணை செய்தார்கள். பிறகு போலிசார் என்னை அரசு மருத்துவமனைக்கு போக சொல்லி நான் சென்றேன் என்றால் சரிதான். இந்த விவரத்தையும் நான் புகாரில் சொல்லியுள்ளேன். சம்பவம் சமயம் மேற்பார்வையாளர் என்ன வேலையாக எங்கு போயிருந்தார் என்று குறிப்பிட்டு என்னுடைய புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்பார்வையாளர் சொல்லி தான் போலிசார் சம்பவ இடம் வந்தார்கள். நான் 10.15 முதல் 10.20 மணிக்குள் மேற்பார்வையாளருக்கு போன் செய்தேன். மேற்பார்வையாளர் 10.30 மணிக்கு சம்பவ இடம் வந்தார். சம்பவ இடத்திலிருந்து அரசு மருத்துவமனைக்கு 7 நிமிடத்திலிருந்து 10 நிமிடத்திற்குள் வந்துவிட முடியும் என்றால் 15 நிமிடம் ஆகும். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து அரசு மருத்துவமனைக்கு 7 நிமிடத்திலிருந்து 10 நிமிடத்திற்குள் வந்துவிட முடியும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து அரசு மருத்துவமனைக்கு வரும் வழியில் தான் தாராபுரம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையம் வந்து புகார் கொடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நேராக அரசு

மருத்துவமனை வந்தேன். அரசு மருத்துவமனைக்கு வந்து போலிசார் விசாரிக்கும் வரை நான் புகார் கொடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அரசு மருத்துவமனையில் வந்து தான் விசாரித்து புகார் பெற்றுக்கொண்டார்கள். 10.30 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து கிளம்பி 10.45 மணிக்கு அரசு மருத்துவமனைக்கு வந்திருப்பேன் என்றால் சரிதான். பிறகு போலிசார் கால்மணிநேரத்தில் அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள். போலிசார் 11 மணிக்கு வந்து என்னை விசாரித்தார்கள். என்னை போலிசார் காவல் நிலையம் வரச்சொல்லி 1ம் எதிரியிடம் பணத்தை கைப்பற்றியதாக காண்பித்தார்கள் என்றால் சரிதான். இதற்கு முன்பாக எதிரிகளை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். போலிசார் சொல்லிதான் தெரியும். கடையில் வசூலான பணத்தை மற்ற சாட்சிகளான குணசேகரன் மற்றும் சுரேஷ் ஆகியோருடன் சேர்ந்து செலவு செய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இருசக்கர வாகனத்தில் சென்று விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும் என்னை எதிரிகள் தாக்கவும் இல்லை பணத்தை பறிக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே பணத்தை பறித்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பீர்கள் என்றால் பணம் காணாமல் போனவுடனே போலிசாருக்கு தகவல் கொடுத்து போலிசார் சம்பவஇடத்தில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் என் முன்னால் எழுதி என்னிடம் படித்துக்காட்டப்பட்டு என்னிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள். பணத்தை நானும் மற்ற சாட்சிகளான குணசேகரனும் மற்றும் சுரேஷ் ஆகியோர் செலவு செய்துவிட்டு எங்களுக்கு எந்த பிரச்சினையும் வரக்கூடாது என்று பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**(1 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக வேண்டி அதனை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டது.)**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஒப்பம்.கு.சக்திவேல்)
சார்பு நீதிபதி,
தாராபுரம்.